செ.வெ.எண்:07 நாள்: 03.10.2020

# பத்திரிக்கைச் செய்தி

தமிழ்நாடு அரசு சமூகப்பாதுகாப்புத்துறையின் கீழ் இயங்கும் ஒருங்கிணைந்த குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவரை தலைவராக கொண்டு இயங்கி வரும், அரியலூர் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகில் சமூகப்பணியாளர் - 1 பணியிடம் மற்றும் புறத்தொடர்பு பணியாளர் - 1 பணியிடம் என மொத்தம் இரண்டு பணியிடங்கள் காலியாக உள்ளது. இப்பணியிடங்களினை 1 வருட கால ஒப்பந்த அடிப்படையில் நிரப்பிட தகுதியான நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. மேலும் அரியலூர் மாவட்டத்தை சார்ந்தவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

**சமூகப்பணியாளர் - 1 பணியிடம் - கல்வி தகுதி:** பட்டதாரி / முதுகலை பட்டதாரிகள் (10+2+3 Pattern) மேலும் உளவியல் / சமூகப்பணி / சமூகவியல் / வழிகாட்டுதல் மற்றும் ஆற்றுப்படுத்துதல் பட்டம் பெற்றிருப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். **வயது வரம்பு:** 40 வயது (01.06.2020) மிகாமல் இருத்தல் வேண்டும். **முன் அனுபவம்:** குழந்தைகள் சார்ந்த பணியில் 2 ஆண்டுகள். **தொகுப்பூதியம்:** ரூ.14,000/- (ஒரு மாதத்திற்கு)

**புறத்தொடர்பு பணியாளர் - 1 பணியிடம் - கல்வி தகுதி:** 10ம் வகுப்பு அல்லது 12ம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் மற்றும் குழந்தைகள் சார்ந்த படிப்பு பிரிவில் சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும். **வயது வரம்பு:** 40 வயது (01.06.2020) மிகாமல் இருத்தல் வேண்டும். **முன் அனுபவம்:** குழந்தைகள் சார்ந்த பணியில் 1 ஆண்டு. தொகுப்பூதியம்: ரூ.8,000/- (ஒரு மாதத்திற்கு)

விண்ணப்ப படிவத்தினை https://ariyalur.nic.in என்ற மாவட்ட இணையதள முகவரியிலிருந்து பதிவிறக்கம் செய்து, பூர்த்தி செய்த விண்ணப்ப படிவத்தினை 17.10.2020 அன்று மாலை 05.00 மணிக்குள் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு, இரண்டாவது தளம், அரசு பல்துறை வளாகம், ஜெயங்கொண்டம் சாலை, அரியலூர் - 621704 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இஆப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**